**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>**

**<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>**

**<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>**

**<u>MCOP.No.81/2019</u>**

பெயர் :– பால்ராஜ் (P.W.–)

த/பெ. :–

தேதி :– 05.06.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

12.06.2018 அன்று வதிஸ்ட்டாச்சேரி அருகில் வெள்ளத்திடல் என்ற இடத்தில் காலை 11.00 மணியளவில் விபத்து நடந்தது. சரவணகுமார் என்பவருக்கு சொந்தமான TN 68 A 1128என்ற இருசக்கர வாகனத்தில் கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்வதற்காக வரும்போது விபத்து ஏற்பட்டது. நான் தனியார் பெயிண்ட் நிறுவனத்தில் Helper ஆக வேலை பார்க்கிறேன். எனது வேலை அந்த நிறுவனத்தில் பொருட்களை எடுத்து கொடுத்து உதவியாக இருப்பதாகும். நான் வேலை பார்ப்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. அதேபோன்று எனது சம்பளம் குறித்து விபரங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. அந்த விபத்துசமயத்தில் நான் இருசக்கர வாகனத்தில் தலையை சாய்த்துக்கொண்டு போன் பேசிக்கொண்டு கவனக்குறைவாக வேகமாக வந்து எதிரே வந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தினை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல.

நான் வந்த இருசக்கர வாகனம் 125 CC கியர் கொண்ட அதிவிரைவு வாகனம் என்றால் சரிதான். அந்த விபத்தில் எதிரே வந்த இருசக்கர வாகனம் 50 CC பவர் கொண்ட சாதாரண கியர் இல்லாத மொபட் வாகனம் என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் ஓட்டிவந்த வாகனத்தின் உரிமையாளரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. நான் ஓட்டிவந்த வாகனத்திற்கு காப்பீடு உள்ளது. நான் ஓட்டி வந்த வாகனம் விபத்தில் சேதமடைந்து எனக்கு காயம் அடைந்திருந்தால் அந்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் தான் எனக்கு இழப்பீடு அளிக்க வேண்டும் என்றால் சரிதான். நான் இந்த விபத்தில் காயம் பட்ட உடன் முதலுதவி சிகிச்சைக்காக மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் சேர்ந்தேன். விபத்து சமயத்தில் நான் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டி வந்தேன் என்றால் சரியல்ல.

நான் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தபோது எதனால் விபத்து ஏற்பட்டது என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டு கூறவில்லை. இந்த விபத்து சம்பந்தமாக எனது மனைவிதான் காவல் நிலையத்தில புகார் அளித்தார். என்னை போலீசார் இந்த விபத்து சம்பந்தமாக விசாரிக்கவில்லை. இந்த விபத்தானது நான் போன் பேசிக்கொண்டே வாகனத்தை ஓட்டி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய 1எதிர்மனுதாரருக்கு தலையிலும், கை. கால்களிலும் பலத்த அடிப்பட்டு அவர் மயங்கிய நிலையிலேயே சங்கரன்பந்தல் அரசு மருத்துவமனைக்கு முதலுதவிக்கு அழைத்துச்சென்றும், அங்கிருந்து மயிலாடுதுறை வைரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டும், உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்ததால் அவரை மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு தொடர்ந்து 20 நாட்களுக்கு மேல் சுயநினைவு இன்றி அதிதீவிர சிகிச்சை பெற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டும், இருந்த சூழ்நிலையில் அவரால் விபத்து ஏற்படுத்திய தாங்கள் மீது புகார் கொடுக்க அந்த சமயத்தில் இயலவில்லை என்பதால் தாங்கள் விபத்து விபரங்களை மறைத்து விட்டு 1ம் எதிர்மனுதாரர் மீது குற்றம் சுமத்தி தங்களது மனைவி மூலம் காவல் நிலையத்தில் பொய்ப்புகார் அளித்து அதன் பெயரில் 1ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது,

உண்மையில் 1ம் எதிர்மனுதாரர் எவ்வித குற்றமும் செய்யாத நிலையில் அவர் உண்மை குற்றவாளி இல்லை என்பதால் தங்களுக்கு அவர் நஷ்டஈடு எதுவும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவி கொடுத்த புகாரின் பேரில் போலீசார் விசாரணை எதுவும் செய்யாமல் நான் ஓட்டி வந்த பெரிய வாகனத்தை மறைத்துவிட்டு சிறிய வாகனமான 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தின் மீது வழக்கு பதிவுசெய்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் இந்த விபத்தினால் பாதிக்கப்பட்டு தொடர்ந்து 6 மாதம் காலம் அவர் யார் என்று நினைவு கொள்ள முடியாத நிலையில் இருந்தார் என்று சொன்னால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. அந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு பதிலாக வேறு நபரை இவ்வழக்கில் உட்படுத்தி அந்த குற்றவழக்கில் அபராதம் கட்டி முடித்துவிட்டார்கள் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த விபரங்கள் அனைத்தும் நான் வழக்கை தாக்கல் செய்த பிறகுதான் 1ம் எதிர்மனுதாரருக்கு தெரியும் என்று

சொன்னால் அதுப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

பொய் புகாரினை பதிவுசெய்து 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நான் எவ்வித இழப்பீடும் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. இவ்விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயம் குறித்தும் அது சம்பந்தமாக ஏற்பட்ட செலவுகள் குறித்தும் மிகைப்படுத்தி வழக்கினை  தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரில்ல.  வருமானம் குறித்து எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யாமல் வருமான இழப்பு குறித்து இழப்பீடு குறித்து அதிகான தொகை கேட்டு இந்த வழக்கினை  தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் நான் எனது வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்து 1ம் எதிர்மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, அதனால் காயமுற்ற 1ம் எதிர்மனுதாரருக்கு நான் தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் தவறான சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.